28th February 1963]

திரு. டி. கார்ச்சா கவுடர்: இந்தத் திட்டத்தை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு நிறைவேற்றுவதாக இருந்தால் ராஜாஜி நீர்த்தேக்கம் என்ற பெயரை மாற்றி "காமராஜ் நீர்த் தேக்கம்" என்று பெயர் வைப்பார்களா?

(பதில் இல்லை.)

விளம்பரங்களில் ஜாதி, மதப் பெயர்கள்

* 87 கேள்வி.—திரு முனு ஆதி: கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பொதுவாக உள்ள கடை விளம்பரங்களிலிருந்து ஜாதி, மதப் பெயர்களை நீக்குமாறு செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

திரு. முனு ஆதி: தலைவர் அவர்களே, இதனால் இன்னும் வகுப்பு வாதம், சாதி பேதம் உருவாகிவரும் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன். அதைத் தடுக்க உருவான முறையில் சட்டம் கொண்டுவர முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவரவர்கள் வைக்கிற கடைகளுக்கு அவரவர்கள் இஷ்டப்படி பெயர் வைத்துக்கொள்கிறார்கள். இப்படித்தான் பெயர் வைக்கவேண்டுமென்று கட்டுப்படுத்துவது முறை அல்ல.

திரு. இரா. நல்லமுத்து: சில ஊர்களுக்கு சாதியின் பெயர்களை வைக்கிறார்களே, அதை மாற்ற அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பொதுஸ்தாபனங்களுக்கு சாதியின் பெயரை வைப்பதாக இருந்தால் அதை இப்போது அரசாங்கம் அனுமதிப்பது இல்லை.

Ex-District Board, Salem

* 88 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have taken possession of the immovable properties such as buildings of the Ex-District Board, Salem;

(b) if so, the number of buildings that have been taken over by the Government in the North Salem district and the value of the buildings;

(c) whether the Government have to clear any liabilities of the Ex-District Board in North Salem district; and

(d) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKATAVATSALAM: (a) Yes, Sir.

(b) (i) Thirteen.

(ii) Rs. 1,09,357.

(c) Yes.

[28th February 1963

(*d*) Details for North Salem district alone cannot be furnished as accounts are maintained for the district as a whole and not separately for North Salem and South Salem.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: ஜில்லா போர்டு சொத்து களில் ஏதாவது மீதி ஏற்பட்டால் பஞ்சாயத்து யூனியன்களுக்குப் பகிர்ந்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மீதி ஏற்பட்டால் அவ்வாறு பகிர்ந்து கொடுக்கப்படும். ஆனால் அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய பாக்கி அதிகமாக இருக்கிறது. முதலில் வெளியாருக்குக் கொடுக்க வேண்டிய கடன்கள் கொடுக்கப்படுகிறது. அரசாங்கமும் அதற்கு நிதி உதவுகிறது. அதை வைத்து வெளியாருக்குக் கொடுக்கும் கடன் தீர்க்கப்பட்டு வருகிறது.

SRI C. CHIRANJEEVULU NAIDU: When do the Government propose to appoint District Educational Officers to control Secondary Education which was hitherto under the control of the District Boards?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Orders will be issued shortly.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: சேலம் ஜில்லா போர்டு எவ்வளவு கடன் தொகை அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டு மென்பதை அறிய முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்த விவரம் இப்போது என்னிடம் இல்லை.

மாவட்டக் கழகம் (செங்கற்பட்டு)

* 89 கேள்வி.—**திரு. முனு ஆதி:** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டக் கழகம் கலைக்கப்படும்பொழுது அதன் நிதிநிலை என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM:

	RS.	nP.
(*a*) Total assets inclusive of the book value of the buildings of the defunct district board	29,23,004	24
(*b*) Total liabilities inclusive of the liabilities due to Government ..	35,20,879	00

ஆதாரப்பள்ளிகள்

* 90 கேள்வி.—**திரு. முனு ஆதி:** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962 ஜூன் மாதத் துவக்கத்தில், தமிழ் நாட்டில் எத்தனை ஆதார ஆரம்பப் பாடசாலைகளும், ஆதார ஆசிரியர்ப் பயிற்சிப் பள்ளிகளும் இருந்தன?